[2024 பிப்ரவரி 22

(ஆ) தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) இல்லை பேசி முடிந்துவிட்டது. அதைத் திரும்பத் திரும்பப் பேசுகிறீர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இருக்கையை விட்டு எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அருள். . . (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2024 பிப்ரவரி 22] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

5. வரவு-செலவுத் திட்டம் மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை, 2024-2025, பதிலுரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024–2025 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 2024–2025 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை விவாதத்திற்கான பதிலுரை. (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசியது அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) 2024–2025 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை. . . (குறுக்கீடு)

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) சாதிவாரி கணக்கெடுப்பு நடத்துதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், நீங்கள் பேசியது எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை நேற்று தீர்த்து வைக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தின்மீது என்னுடைய பதிலுரையை வழங்குவதற்கு வாய்ப்புத் தந்திருக்கக்கூடிய. . . (குறுக்கீடுகள்) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை. . . (குறுக்கீடுகள்)

(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் இருக்கையை விட்டு எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)